கால்நடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# பால்வளம்

மானியக் கோரிக்கை எண் – 8

# அறிவிப்புகள்
# 2016–2017

எஸ்.பி. சண்முகநாதன்
பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர்

## 1. அதிநவீன பாலகங்கள் அமைத்தல்

தமிழகத்தில் சென்னையை தொடர்ந்து இதர மாவட்டங்களிலும், ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு அதிநவீன பாலகம் வீதம் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், 17 அதிநவீன பாலகங்கள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் செலவில்** அமைக்கப்படும்.

## 2. பால் குளிரூட்டும் நிலையங்களை மேம்படுத்துதல்

தமிழ்நாடு பால்வளத்துறையின் கீழ், 35 பால் குளிரூட்டும் நிலையங்கள் இயங்கி வருகின்றன. மாவட்டங்களில் செயல்பட்டு வரும் பால் குளிரூட்டும் நிலையங்கள் பொலிவுறும் வகையில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** நடப்பாண்டில் **ரூபாய் 7 கோடி செலவில்** மேற்கண்ட பால் குளிரூட்டும் நிலையங்கள் மேம்படுத்தப்படும்.

## 3. சமச்சீர் கால்நடைத்தீவன திட்டத்தை விரிவாக்குதல்

கால்நடைத்தீவன உற்பத்தி செலவை குறைத்து, பால் உற்பத்தியை அதிகரிக்க ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் சமச்சீர் கால்நடைத்தீவன திட்டம் காஞ்சிபுரம்–திருவள்ளூர், தர்மபுரி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஒன்றியங்களுக்கு இரண்டாம் கட்டமாக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 7 கோடியே 8 இலட்சம் செலவில்** விரிவாக்கம் செய்யப்படும்.

## 4. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

தமிழக அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நிதி உதவியுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் சொந்த நிலம் கொண்டுள்ள 100 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தலா ரூபாய் 10 இலட்சம் செலவில் 100 புதிய கட்டடங்கள் **ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில்** கட்டித்தரப்படும்.

## 5. வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் 5 சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

தமிழகத்தில் செயல்பட்டு வரும், 29 சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களில், வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் அலுவலகங்களை அடிக்கடி இடமாற்றம் செய்ய வேண்டியதை தவிர்த்து நிரந்தர இடத்தில் இயங்குவதன் மூலம் பொது மக்களுக்கு சிறப்பான சேவையை அளிப்பதற்காக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** நடப்பாண்டில் திருவள்ளூர், தூத்துக்குடி, தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் மதுரை ஆகிய 5 சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் **ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் செலவில்** கட்டித் தரப்படும்.

## 6. பால்வளத்துறை பயன்பாட்டிற்கு 3 புதிய ஊர்திகள் கொள்முதல் செய்தல்

பால்வளத்துறைப் பணியாளர்கள் களப்பணி மேற்கொண்டு பால் உற்பத்தியை பெருக்குவதற்கும், பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு கால்நடைத்தீவனம், செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் மருத்துவ வசதிகள் உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்யவும், பால் கூட்டுறவு சங்கங்களை ஆய்வு செய்து சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பால்வளத்துறை அலுவலகங்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்கு மாற்றாக, புதிய 3 ஊர்திகள் **ரூபாய் 18 இலட்சம் செலவில்** கொள்முதல் செய்யப்படும்.

**எஸ்.பி. சண்முகநாதன்**
பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர்